# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2018–ம் வருடம் மே மாதம் 27–ம் தேதி காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## <u>பொருட்கள்</u>

1)COVID – 19 கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவுதலை தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகள் பகுதிகளிலும் கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதன்படி பொது சுகாதார பிரிவு வாகனம் எண். TN74D4151டேங்கர் லாரி மற்றும் வாகனம் எண். TN74Z 4536 Tumber Blazer –மூலம் கிருமி நாசினி ஹைபோ குளோரைடு தெளிக்கும் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக சின்டெக்ஸ் டேங்கில் மின் மோட்டார் மற்றும் தெளிப்பாண் பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 20000/- ஆகும். மேற்கண்ட பணிக்கான செலவினத்தினை நகராட்சி அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண். 15-ன் கீழ் ஒப்பந்த்தாரர் திரு. ஜெகஸ்லால் அவர்களிடம் பணியினை ஒப்படைத்து பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 364/2020/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1640, நாள்.27.05.2020.</u>**

**COVID-19 நிவாரணம்/நோய் தடுப்பு பணிகளுக்கான அரசு மானியத் தொகை ஒதுக்கீடு நிதியிலிருந்து இச்செலவினத்தினை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

2) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள அத்தியாவசிய உபகரணங்கள் கிருமி நாசினிகள் மற்றும் கொரோனா சம்மந்தப்பட்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அலுவலக ந.க.எண். 3336/J2/2020- 4 நாள் 23/03/2020 (ம) ந.க.எண். 3336/ஜெ2/2020- 13 நாள் 09/04/2020-ன் படி ரூ. 3,00,000/- மற்றும் ரூ. 13,00,000/- ஆக மொத்தம் ரூ. 16,00,000/- வரப்பெற்றது. மேற்படி வரப்பெற்ற நிதியினை கொரோனா தடுப்பிற்குரிய தலைப்பின் கீழ் செலவு செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு செலவும் செய்யப்பட்டு அதற்கு 04/05/2020-ம் தியதியின்படி

பயனீட்டு சான்று மற்றும் பணி முடித்தமைக்கு சான்று (UC & CR)நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 3336/ஜெ1/2020-16 நாள் 23/04/2020-ன் படி மூன்றாவது தவணையாக ரூ. 5,00,000/-க்கான கோவிட்-19 பேரிடர் மேலாண்மைக்கான நிதி வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற தொகையினையும் கொரோனா தலைப்பின் கீழ் செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- கோவிட்-19-ன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மூன்றாவது தவணையாக வரப்பெற்ற நிதி ரூ.5,00,000/- னை கொரோனா தலைப்பின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 246/2020/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1641, நாள்.27.05.2020.</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

3) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் வாகனம் எண்.TN 74D 4151-ல் Covid-19 தடுப்பு- கிருமி நாசினி பணிகள் செய்ய வேண்டிய அவசர அவசியம் கருதி சிறிய பழுது பணிகள் மேற்கொள்ள 28/04/2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| 1, | A.R.K. ஆட்டோமொபைல்ஸ் நாகர்கோவில் | 10500/- |
| 2. | K.S.S.S ஆட்டோமொபைல்ஸ் நாகர்கோவில் | 11000/- |

மேற்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளி வ.எண். 2-ஐவிட வ.எண். 1-ல்குறைவாக விலைப்புள்ளி அளித்த A.R.K. ஆட்டோமொபைல்ஸ் நாகர்கோவில் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கும் மேலும் அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- Covid-19 தடுப்புப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ ஆணையர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 549/2009/அ2)

மன்றத் தீர்மானம் எண். 1642, நாள்.27.05.2020.

**A.R.K. ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைந்த நிரக்கில் உள்ளமையால் அங்கீகரிக்கப்படுகிறது.**

4)பத்மனாபபுரம் நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020-ன் கீழ் கீழ்கண்ட விபரப்படி பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1, | பத்மனாபபுரம் நகராட்சி கல்குளம் தாலுகா அலுவலகம் எதிரில் தக்கலை அரசு நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள பழுதடைந்த ஓட்டுக் கூரை கட்டிடத்தை அகற்றி விட்டு 800ச.அ பரப்பளவில் 2 வகுப்பறைகள் அடங்கிய கட்டிடம் கட்டுதல். | 12.00 |

மேற்கண்ட பணிக்கு 23/04/2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** |
|---|---|
| 1, | திரு. வி.ராஜேந்திரன்<br>சூசை நகர் கல்குறிச்சி. |
| 2, | திரு.ஜி.சுந்தர்ராஜ்<br>சேவியர்புரம்<br>பள்ளியாடி.. |
| 3, | திரு.என். ஜான் ஜஸ்டஸ்<br>மேக்கா மண்டபம். |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்ததில் கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

| **வ. எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீடு (ரூ.இலட்சத் தில்)** | **ஒப்பந்தப் புள்ளி கோரிய தொகை ரூ.** | **விலைவிகிதம் கூடுதல் குறைவு** |
|---|---|---|---|---|
| 1, | திரு.வி.ராஜேந்திரன்<br>சூசைநகர்<br>கல்குறிச்சி | 12.00 | 1000827.23 | -0.01%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 2, | திரு.ஜி.சுந்தர் ராஜ் சேவியர் புரம் பள்ளியாடி | 12.00 | 1005198.54 | 0.42% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |
| 3, | திரு.என். ஜான் ஜஸ்டஸ் மேக்காமண்டபம் | 12.00 | 1040753.13 | 3.98% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் (-0,01% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு) வழங்கியுள்ள வ.எண்.1-ல் காணும் ஒப்பந்ததாரர் திரு. வி. ராஜேந்திரன், சூசை நகர் கல்குறிச்சி அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு;-அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1662/2020/இ1)

<u>**மன்றத் தீர்மானம் எண். 1643, நாள்.27.05.2020.**</u>

**ஒப்பந்தக்காரர் திரு. வி. ராஜேந்திரன் வழங்கியுள்ள குறைந்த நிரக்கிலான ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

5)திடக்கழிவு மேலாண்மை விதி 2016-ன் படி தூய்மை பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சிக்கு அரசாணை எண்.101 நாள் 30/04/1997-ன்படி மொத்தம் 96 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகிறது. தற்போது பணி புரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள் 37 ஆகும். மேற்படி மீதமுள்ள 59 துப்புரவு பணியாளர்கள் தேவையாகும்.

மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.K.Dis.No/28369/J3/2018. நாள் 04/12/2018-ன் படி 59 துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்ய மூன்று வருட காலத்திற்கு மாவட்ட ஆட்சியரின் வரையறுக்கப்பட்ட விலை விகிதத்தின்படி பணியாளர்கள் நியமனம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சிப் பகுதிகளில் குப்பைகளை வீடு வீடாக பிரித்து வாங்கி சேகரித்து அப்புறப்படுத்தியும் மற்றும் அனைத்து பகுதிகளில் உள்ள வாறுகால்கள் மெயின் ரோடு தினமும் சுத்தம் செய்யவும் பொது மக்கள் கூடும் அதிகம் இடங்கள் சுத்தம் செய்தல் மற்றும் அனைத்து திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் Micro Compost Yard -களில் உரம் தயாரிக்கவும் தேவைப்படும் 59 துப்பரவு பணியாளர்களை தனியார் மூலம் பணி செய்ய 2019-2020-ம் ஆண்டுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறவும் அதற்காகும் செலவினத்திற்கும் இந்நகர் மன்ற

தீர்மானம் எண்.1375, நாள் 02/11/2018-ன்படி ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு நிறுவனத்தாரர் M/s. Southern Soild Waste Management Service. Mulagumoodu ஒப்பந்ததாரர் மூலம் 30/04/2020 வரை 1 வருட காலத்திற்கு 59 துப்புரவு பணியாளர்கள் தினக்கூலி ஊதிய அடிப்படையில் ஒப்படைப்பு செய்யப்பட்டது. தற்போது ஒப்புதல் பணி 1 வருட காலம் (அதாவது 30/04/2020 வரை) முடிவடைந்து விட்ட நிலையில் புதியதாக அடுத்த நடப்பு ஆண்டிற்கு ஒப்பந்தம் கோர தற்போது Covid -19 கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவுதலை தடுக்கும் பொருட்டு பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தற்சமயம் ஒரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய (01/05/2020 முதல் 31/05/2020 வரை) இந்நகர் மன்றத் தீர்மானம் எண். நாள் 28/04/2020-ன் படி அனுமதி வழங்கப்பட்டதன்படி மேற்கண்ட நிறுவனதாரர் மூலம் (M/s Southern Solid Waste Management Service. Mulagumoodu) பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி நடப்பு புதிய ஆண்டுக்கு 2020-2021-ம் ஆண்டு 2019-2020-ம் ஆண்டுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண். எ3/8583/2019, நாள் 10/07/2019-ன் படி வரையறுக்கப்பட்ட விலை விகிதத்தில் (Sanitary Worker Rs. 515/-) தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி பெற்று தனியார் ஒப்பந்ததாரர் மூலம் 59 துப்புரவு பணியாளர்களை கொண்டு சுகாதார பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அ.னுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 370/2020/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1644, நாள்.27.05.2020.</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

6)பத்மனாபபுரம் நகராட்சியில் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்ய ஆணையாளர் (ம) பொதுப்பணி மேற்பார்வையாளருக்கு E-Token பெற அதற்கான Digital Signature Certificate/E-Token-New Application and letter தயார் செய்து Digital Identify, Trichy என்ற நிறுவனத்தாருக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

அதன்படி Digital Signature Card-க்கான பட்டியல் தொகை ரூ. 5200/-ஐ வழங்க பட்டியல் வரப்பெற்றது. அதன்படி மே 2020-ம் மாதம் நடைபெறவுள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிக்கான ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கப்படவுள்ளதால் அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து Digital Signature Card பெற அதற்கான பட்டியல்

தொகை ரூ.5200/-ஐ இவ்வலுவலக இளநிலை உதவியாளர் ற்றி. கண்ணன் என்பவரால் தொகை செலுத்தப்பட்டது.

அதன்படி மேற்கண்ட தொகை ரூ.5200/-ஐ திரு. ற்றி. கண்ணன் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 739/2019/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1645, நாள்.27.05.2020.</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

7) பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் புகைபரப்பும் இயந்திரம் மூலம் புகை மருந்து அடிக்க தேவையான புகை மருந்து உருளைகள் (Indoor fogging cylinders) 500 எண்ணம் மாதம் 1-க்கு 100 எண்ணிக்கை வீதம் 5 முறையாக வாங்குவதற்கு அனுமதிக்கும் அதற்காகும் உத்தேச செலவீன தொகை ரூ. 1,00,000(ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- பொது சுகாதார அவசர அவசியம் கருதி புகை மருந்து உருளைகள் வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவீனத்திற்கும் மன்ற அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். /2020/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1646, நாள்.27.05.2020.</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

8)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2019-2020-ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் கீழ்காணும் கட்டிட பணிகள் மேற்கொள்ள ரூ.7.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1, | பத்மனாபபுரம் நகராட்சி தக்கலை அரசு மருத்துவமனை அருகே அமைந்துள்ள அரசு தொடக்கப்பள்ளி வளாகத்தில் பாலர் பள்ளி கட்டிடம் கட்டுதல் (கழிவறை மற்றும் சமையலறை வசதிகளுடன் ) | 7.00 |

மேற்படி பணிகளைச் செய்ய கூடுதல் ஆட்சியர் (ம) திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை

ஆணை எண். ஆ3/4068/2019, நாள் 07/05/2020- ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 1647, நாள்.27.05.2020.</u>**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

9) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்-19 தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான லைசால் 500 லிட்டர் மற்றும் பிளிச்சிங் பவுடர் 5000 கிகி விநியோகம் செய்ய 19/05/2020-ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1, | M/s. கருடா குரூப்ஸ், 57, வெள்ளாளர் கீழத் தெரு, கிருஷ்ணன்கோவில், நாகர்கோவில். | 1)லைசால் - ரூ.120(1 லிட்டர்) 2)பிளீச்சிங் பவுடர் -ரூ. 60(1 கி.கி) |
| 2, | M/s. கிரீஷ் இம்பெக்ஸ் 39/73, வெள்ளாளர் மேற்கு தெரு, கிருஷ்ணன்கோவில், நாகர்கோவில். | 1)லைசால் - ரூ.140(1 லிட்டர்) 2)பிளீச்சிங் பவுடர் -ரூ. 72(1 கி.கி) |

மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் வரிசை எண்.1-ல் காணும் கருடா குரூப்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது.

எனவே குறைவான விலைப்புள்ளி ஒப்படைத்துள்ள M/s. கருடா குரூப்ஸ், நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு;- கோவிட்-19 தடுப்பு நடவடிக்கைக்காக அவசர அவசியம் கருதி ஆணையர் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 246/2020/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1648, நாள்.27.05.2020.</u>**

**M/s. கருடா குரூப்ஸ் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி குறைந்த நிரக்கில் உள்ளமையால் அங்கீகரிக்கப்படுகிறது.**

10) இந்நகராட்சி 2018-2019 தணிக்கை அறிக்கை (வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி) (Printing and Binding Photo state and CD Charges) தயார் செய்த வகையில் E. Arunthathi (Computer Job Typing- Tamil & English)

1)வருவாய் மற்றும் மூலதனநிதிக்கு ரூ.8860/-

2)குடிநீர் மற்றும் வடிகால் நிதிக்கு ரூ.2070/-

மொத்தம் ரூ.10930/-

ரூ. 10930/- (ரூபாய் பத்தாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது மட்டும்) E. Arunthathi Computer நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1498/2015/அ1)

**மன்றத் தீர்மானம் எண். 1649, நாள்.27.05.2020.**

**அனுமதிக்கப்படுகிறது.**

11) இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2015-ன் கீழ் மருந்துக் கோட்டை உரக்கிடங்கு வளாகத்தில் பிளாஸ்டிக் பொடிக்கும் இயந்திரம் மற்றும் பிளாஸ்டிக் சேகரிக்கும் கூடம் அமைக்கும் பணி ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்புத் துறை, கன்னியாகுமரி மாவட்டம் மூலம் தினபூமி நாளிதழில் 02/06/2016-ல் பிரசுரம் செய்த வகையில் பட்டியல் எண்.50184, நாள் 02/06/2016-ன்படி தொகை ரூ.9024/-ஐ (ஒன்பதனாயிரத்து இருபத்தி நான்கு மட்டும் ) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு;- அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4652/2015/இ1)

**மன்றத் தீர்மானம் எண். 1650, நாள்.27.05.2020.**

**அனுமதிக்கப்படுகிறது.**

12) பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில் உணவக இருப்பு அறையின் மேல் பகுதியில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி பொருட்கள் சேதராமாகும் நிலை ஏற்படுகிறது. மேலும் கதவு, மின் விளக்கு (ம) மின் விசிறி ஆகியவை பழுதாகி இயங்காத நிலையில் உள்ளது எனவும் சமையல் செய்ய கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படுவதாகவும் மேற்படி அம்மா உணவகத்தில் பராமப்பு பணிகள் மேற்கொண்டு வழங்குமாறு இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர் அவர்களால் 13/03/2020-ம் தேதி மற்றும் 04/05/2020-ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் படி அம்மா உணவக பராமரிக்கவும் இருப்பு அறையை (ம) பழுதாகி உள்ள மின்சாதன பொருள்கள் (ம) சமையல் பாத்திரங்கள் வாங்கவும் பொறியாளர் அவர்களால் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்படி

சமையலறை பாத்திரங்கள் வாங்க கீழ்க்கண்ட உள்ளூர் நிறுவனதாரர்களிடமிருந்து கீழ்க்கண்ட விபரப்படி பொருட்களின் விலைப்புள்ளி கோரப்பட்டது.

விலைப்புள்ளி கொடுத்த நிறுவனத்தாரர்கள் விபரம்.

| வ.எண். | பொருட்களின் விபரம் | அளவு | விலை விகிதம் ஒன்றுக்கு | திரு.அர்ஜீனர் விலை | திரு.கே.ற்றி.ரமேஷ் | | திரு.ஆஸ்டின் கிலாரி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1, | Commercial Grinder (5 liter) | 1 | 24100 | 24100 | 24300 | 24300 | 25000 | 25000 |
| 2. | Karandi | 3 | 200 | 600 | 200 | 600 | 190 | 570 |
| 3. | Kuzhi Karandi | 2 | 480 | 960 | 480 | 960 | 460 | 920 |
| 4. | Kadai | 2 | 6700 | 13400 | 7000 | 14000 | 6500 | 13000 |
| 5. | Pressure cooker (25 liter) | 2 | 12400 | 24800 | 13000 | 26000 | 13000 | 26000 |
| 6. | Emergency light | 1 | 38000 | 38000 | 3950 | 3950 | 4000 | 4000 |
| 7. | Silver Cup | 25 | 45.00 | 1125 | 43.00 | 1075 | 40.00 | 1000 |
| 8. | Plastic Kudam | 4 | 135.00 | 540.00 | 140 | 560 | 130 | 520 |
| 9. | Steel self with door | 4 | ,7000 | 28000 | 6400 | 25600 | 6700 | 26800 |
| 10. | Exhaust Fan | 1 | 5200 | 5200 | 5800 | 5800 | 5500 | 5500 |
| 11. | Tinning Table | 2 | 19000 | 38000 | 18500 | 37000 | 18700 | 37400 |
| 12. | Steel bench | 1 | 15000 | 15000 | 14000 | 14000 | 14500 | 14500 |
| 13. | Steel table | 1 | 9000 | 9000 | 8500 | 8500 | 8900 | 8900 |
| 14. | Plastic Chair | 1 | 1350 | 1350.00 | 1200 | 1200 | 1350 | 1350 |
| 15. | Steel Stool | 1 | 1000 | 1000 | 950 | 950 | 1000 | 1000 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 16. | Commercial Mixe | 1 | 13500 | 13500 | 12000 | 12000 | 12000 | 12000 |

மேற்கண்ட விபரப்படி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இங்களுக்கு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன்படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள பொருட்களை வாங்கவும் அம்மா உணவகத்தில் பராமரிப்பு (ம) பழுது பணிகள் மேற்கொள்ள ரூ.2,30,000/—க்கு உத்தேச செலவினத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி மேற்கண்ட பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி செய்யவும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 364/2020/இ1)

**மன்றத் தீர்மானம் எண். 1651, நாள்.27.05.2020.**

**குறைந்த விலைப்புள்ளிகளின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்திட அனுமதிக்கப்படுகிறது.**

ஒப்பம்/—
தனி அலுவலர் (ம) ஆணையாளர்
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.